(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

# இல. 2(8).] பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 டிசம்பர் 23 புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2021 பெப்ரவரி 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

32/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டில் இதுவரை —

(i) இலங்கையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், மற்றும் விமான எரிபொருள் ஒரு லீற்றரின் விற்பனை விலையில் ஏற்றத்தாழ்வு இடம்பெற்ற முறை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வகை எரிபொருள் லீற்றர் ஒன்றின் மீதும் விதிக்கப்பட்டுள்ள வரி வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி எரிபொருள் வகைகளில் ஒரு லீற்றரை உற்பத்தி செய்வதற்காக ஏற்பட்ட செலவீனம் யாது என்பதையும்;

(iv) உலக சந்தையின் விலைகளுடன் ஒப்பிடும் போது, மேற்படி ஒரு லீற்றரில் அரசாங்கம் பெற்றுள்ள இலாபம்/நட்டம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் டீசல் மற்றும் பெற்றோல் விற்பனை விலை மாற்றமடையும் முறையியல் யாது என்பதையும்;

(ii) அதன் மூலம் அரசாங்கம் பெறுகின்ற இலாபம்/நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) அதன் மூலம் நுகர்வோருக்கு கிடைக்கின்ற நன்மை/தீமை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

141/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரசாங்க சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஊவா மாகாண சபை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வு வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதி முறைகேடுகள் மற்றும் தவறான நிதி பயன்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கணக்காய்வு விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) நிதி முறைகேடுகள் மற்றும் தவறான நிதிக் கையாளல் தொடர்பாக அரசியல் அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

173/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கல்கிசை கடற்கரை மண்ணரிப்பை தடுப்பதற்கு 890 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட மண் நிரப்பல் கருத்திட்டம் தோல்வி அடைந்துள்ளதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கருத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட செயன்முறையில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் தற்போதைய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் தோல்வியடைந்தமையால் கல்கிசை கடற்கரை மற்றும் கடல்சார் சூழல் கட்டமைப்பில் யாதேனும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பின் அதனை மீள இயல்பு நிலைக்கு கொண்டு வருவது தொடர்பில் தங்களது அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

235/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பதனிடப்பட்ட தோற்பொருட்கள்/ தீந்தை, சாயங்களின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பதனிடப்பட்ட தோற்பொருட்கள்/தீந்தை, சாயங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி பதனிடப்பட்ட தோற்பொருட்கள்/தீந்தை, சாயங்களை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு பதனிடப்பட்ட தோற்பொருட்கள்/தீந்தை, சாயங்களை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

265/2020

கௌரவ புத்திக பத்திறண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரதத் திணைக்களத்திற்குரிய இரத்மலானையில் அமைந்துள்ள பிரதான பராமரிப்பு வேலைத் தலத்தின் இயலளவானது போதுமானதாக இல்லையென்பதையும்;

(ii) அது புகையிரதச் சேவையை வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்குத் தடையாக அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இரத்மலானை பிரதான பராமரிப்பு வேலைத் தலத்தின் இயலளவினை அதிகரிப்பதற்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் இயந்திர சாதனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிட எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு செலவிட எதிர்பார்க்கும் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

487/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் சம்பளத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சம்பளத் திருத்தங்கள் மூலம் சம்பளங்கள் என்ன சதவீதங்களில் அதிகரிக்கப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி சம்பளத் திருத்தங்கள் இடம்பெற்ற சேவை வகுதிகளும் அதற்குரிய ஆட்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சம்பள அதிகரிப்புகளின் போது, மேல்நிலை அலுவலர்கள் தொடர்பாக மாத்திரம் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளதை அறிவாரா?

(இ) நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற சகலருக்கும் சமமான அனுகூலங்கள் கிடைக்கும் வகையில் சம்பளத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?

அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

532/2020

கௌரவ ரோஹன பண்டார,— நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் பாரிய குடிநீர்ப் பிரச்சினைகளைக் கொண்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அக்கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

566/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியில் பிணைமுறி மோசடியொன்று இடம்பெற்றது என்பதனை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) அதன் காரணமாக இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்;

(ii) அந்த நட்டத்தினை தடுப்பதற்காக இன்றளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அந்த நட்டத்தினை ஈடு செய்து கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

567/2020

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மனிதர்களின் சருமத்தின் நிறத்தை மாற்றமடையச் செய்யும்/பொழிவூட்டும் (வெள்ளை நிறமாக்கும்) ஔடதங்கள், மாத்திரைகள், தடுப்பூசிகள் மற்றும் களிம்பு (Cream) வகைகளில் பாரியளவில் இலங்கையினுள் விற்பனை செய்யப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு விற்பனை செய்யப்படும் ஔடதங்களில் இறக்குமதி செய்யப்படும் ஔடதங்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளும் நிறுவனம்;

(ii) மேற்படி ஒழுங்குபடுத்தலுக்கான சட்டம்

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி ஔடதங்களை விதப்புரை செய்யும் ஏராளமானவர்களுக்கு மருத்துவ விஞ்ஞான அறிவு இல்லையென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஔடதங்களின் பாவனையால் பல்வேறு குறுகியகால ஒவ்வாமைகள் ஏற்பட்டுள்ளதாக பதிவாகியுள்ளதா என்பதையும்;

(iii) ஔடத பாவனையின் விளைவாக நீண்டகால மோசமான நோய் நிலைமைகள் ஏற்படக் கூடுமென வெளியாகும் மருத்துவக் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு கவனம் செலுத்தப்பட்ட வகையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி ஔடதங்களின் பாவனையினால் விளைவுகள் ஏற்படுமெனில், அதைத் தவிர்க்க வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

579/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் பரப்பளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அளவானது வட மாகாணத்திற்கான மொத்தக் காணிப் பரப்பளவின் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இவ்வகையில் காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது தனியார் காணிகள், விவசாய வாவிகள், விவசாயக் காணிகள் மற்றும் கால் நடைகளுக்கான புற்தரைகளும் சுவீகரித்துக்கொள்ளப்பட்டுள்ளதோடு அது மக்களின் வாழ்வாதாரத்தின் மீது மட்டுமன்றி சகவாழ்வின் மீதும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) மேற்படி காணிகள் சுவீகரித்துக்கொள்ளப்படும்போது மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் மற்றும் மாகாண காணி ஆணையாளர் என்போரின் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

614/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலா வாவியிலிருந்து திசா வாவிக்கு நீரை எடுத்துச் செல்லும் பழைய யோத கால்வாய் சல்வீனியா போன்ற நீர்த்தாவரங்களினால் மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக கால்வாயினூடாக நீர் பாய்ந்தோடுவது தடைப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இது குறித்து தொடர்புடைய அலுவலர்கள் பல தடவைகள் அறிவூட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் எந்தவித தீர்வும் கிடைக்கப்பெறவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எதிர்கால பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக நீரை விநியோகிப்பதற்கு முன்னர், மேற்குறிப்பிட்ட நீர்த்தாவரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

855/2020

கௌரவ நலின் பிரனாந்து, — வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தின் நுகர்வோர் பண்ட கையிருப்புக்களின் மொத்த பெறுமதி யாது;

(ii) 2020 ஜனவரி 01 முதல் 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் ஒவ்வொரு மாதத்திற்கான வருமானம் வெவ்வேறாக யாது;

(iii) 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதியில் வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த மொத்தப் பணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தில் காணப்பட்ட காலாவதியான பண்டங்களின் பெறுமதி யாது;

(ii) மேற்படி பண்டங்கள் தொடர்பில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

857/2020

கௌரவ ஜகத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சமுர்த்தி இயக்கமானது இலங்கையில் வறுமையை ஒழிக்கும் பிரதான இயக்கம் என்பதுடன் அது வறுமையை ஒழிப்பதற்காக பெரும் பங்காற்றியுள்ளதென்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதித் தொகையானது உரிய கணக்குகளின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கடந்த அரசாங்கத்தின் அரசியல் நற்பெயரைக் கட்டியெழுப்புவதற்காக குறைந்த வருமானம் பெறுபவர்களினால் சமுர்த்தி இயக்கத்தில் வைப்புச் செய்யப்பட்ட பெருமளவு நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனின், துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி பயன்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் இத்தொகை உள்ளடக்கப்படும் நிதியம் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) இந்நிதியை துஷ்பிரயோகம் செய்வதில் தொடர்புபட்ட நபர்கள் யாவர் என்பதையும்;

(v) அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

866/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாண கல்வி வலயங்களுள் ஆசிரியர் மிகை காணப்படும் கல்வி வலயங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பாட ரீதியில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) கிழக்கு மாகாண கல்வி வலயங்களுள் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் கல்வி வலயங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அவ்வாறு பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பாட ரீதியில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது கிழக்கு மாகாண சபை இயங்காத நிலையில் மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகள் நேரடியாக உரிய ஆளுநரின் கீழ் மேற்கொள்ளப்படுவதனால் கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் சமநிலையை ஏற்படுத்துவதற்கு அமைச்சினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

943/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் காணப்படும் வேலைவாய்ப்பின்மை விகிதம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாகவும் வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி வேலைவாய்ப்பின்மைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை;

(iii) மேற்படி தீர்வு வழங்கலின் மூலம் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை;

(iv) மேற்படி இலக்குகளை அடைவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2021 பெப்ரவரி 24, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

34/2020

கௌரவ ஹேஷா விதானகே,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை மாகவலி அதிகாரசபைக்குரிய காணிகளை பாரிய கருத்திட்டங்களுக்காக வழங்கும் முறைமை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) வலவ வலயத்தின், சந்திரிக்கா குளப் பிரிவில் டோல் லங்கா(தனியார்) கம்பனி மற்றும் விட்டா ஓகனிக் (தனியார்) கம்பனிகளுக்கு வாழைப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இக்காணி வழங்கலானது உரிய முறைமைக்கமைய வழங்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வரா என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

142/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுரைச்சோலை "லக்விஜய மின் உற்பத்தி நிலையம்" தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தினால் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுரைச்சோலை "லக்விஜய மின் உற்பத்தி நிலையம்" தாபிக்கப்பட்ட திகதி முதல் இற்றைவரை அது செயலிழந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் தொடர்ச்சியான செயலிழப்பு தொடர்பாக அமைச்சினால் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

174/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொவிட்-19 தொற்றுநோய் பரவிய கடந்த காலப்பகுதியில் தொழில் திணைக்களம், சில தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சங்கம் இணைந்து தொழிலாளர்களது மாதாந்த சம்பளத்தினை 14,500/- ரூபா வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி சம்பளக் குறைப்பு நிறுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(ii) பதிவு செய்யப்படாத முறைசாரா துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சம்பளக் குறைப்பினை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றெல், ஏன்?

236/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்யின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தேங்காய் எண்ணெய் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி தேங்காண் எண்ணெய்யை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

268/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராம உத்தியோகத்தர் சேவைக்கென சேவைப் பிரமாணக் குறிப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்பதையும்;

(ii) கிராம உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் மீளாய்வு செய்து அவர்களுக்கு நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதையும்;

(iii) கிராம உத்தியோகத்தர் சேவை மற்றும் கிராம உத்தியோகத்தர் வாழ்க்கைத் தொழிலில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கிராம உத்தியோகத்தர் சேவையின் ஆக்கவிளைவினை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

600/2020

கௌரவ சிவஞானம் சிறிதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம், நெடுந்தீவில் பிரதான போக்குவரத்து மார்க்கமான மாவலித்துறையிலிருந்து சாரப்பிட்டி ஊடாக கோட்டைக்காடு வரையுள்ள 08 கிலோ மீற்றர் நீளமான நெடுந்தீவு பிரதான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்ற இந்த பிரதான வீதியை மாணவர்கள், அலுவலர்கள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்படுத்துவதுடன் நோயாளர் வண்டிகளும் இந்த வீதியில் பயணிக்கின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தப் பிரதான வீதி இதுவரை புனரமைக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) இந்த வீதி முழுமையாக எக்காலப்பகுதியில் புனரமைக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

633/2020

கௌரவ சாணக்கியன் இராசபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள திக்கோடை வைத்தியசாலையானது மக்களது தேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி வைத்தியசாலையில் சேவைகளைப் பெறுவதற்காக வருகைதரும் நோயாளர்கள் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் நாளாந்தம் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

657/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, ரிச்மன்ட் கல்லூரிக்கு மிக அருகில் இலக்கம் 03, 04 ஆம் ஒழுங்கை, ரிச்மன்ட் கந்த, காலி எனும் முகவரியில் வசிக்கும் எம்.எம். லெவ்மிக தத்விது குணதிலக்க என்ற பிள்ளையை காலி ரிச்மன்ட் கல்லூரியின் முதலாம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளவில்லை என்பதையும்;

(ii) 2019.11.10 ஆம் திகதிய B-378 இலக்கத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு தொடர்பில் குறித்த இடம் சார் விசாரணை மேற்கொள்ளாமல் மேற்படி மேன்முறையீட்டை கவனத்திற் கொள்ளாது இப்பிள்ளையை பாடசாலையில் இணைத்துக் கொள்ளவில்லை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தற்போது மேற்படி பிள்ளைக்கு கல்வி கற்பதற்கு பாடசாலை இல்லை என்பதால் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

668/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள அருவி ஆறு நீர்ப்பாசன கருத்திட்டத்திற்குச் செலவாகும் நிதி எந்த வகையில் பெறப்படவுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

718/2020

கௌரவ சாந்த பண்டார,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வது விளையாட்டு நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தடகள விளையாட்டுக்கென தற்போது காணப்படுகின்ற சர்வதேச விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மாவட்ட மட்டத்தில் முழுமையான வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான முறையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக நிதி ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

721/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தில், நானாட்டான் பிரதேசத்தில் புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்காக 2020.02.18 ஆம் திகதியன்று அத்திவாரம் வெட்டுகையில் புராதன பெறுமதிவாய்ந்த நாணயங்கள் கிடைத்துள்ளன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன்போது எத்தனை நாணயங்கள் கிடைத்துள்ளன;

(ii) அந்த நாணயங்கள் எந்த யுகத்திற்கு உரியவை;

(iii) மேற்படி நாணயங்கள் புழக்கத்தில் இருந்த காலத்தில் நிலவிய ஆட்சி யாது;

(iv) குறித்த நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள மீன் மற்றும் வாள் குறியீடுகளுக்கும், அந்த நாணயங்கள் புழக்கத்தில் இருந்த காலத்தில் நிலவிய ஆட்சிக்கும் இடையிலான தொடர்பு யாது;

(v) இந்த நாணயங்களுக்கான புராதன பெறுமதி பற்றிய விடயங்களை வரலாறு பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

863/2020

கௌரவ மனுஷ நாணாயக்கார,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 01.01.2020 முதல் 10.10.2020 வரை இலங்கைக்கு வருகை தந்துள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிலாளர்கள் எந்நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளனர் என்பதையும்;

(iii) இலங்கைக்கு வருவதற்காக இதுவரை பதிவு செய்துள்ள இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிலாளர்கள் பணிபுரியும் நாடுகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான வழிமுறை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களை தனிமைப்படுத்துவதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்களின் தனிமைப்படுத்தலை ஒருங்கிணைப்பதற்கு "அவன்கார்ட்" (Avant Guard) எனும் நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(v) ஒரு தொழிலாளரை தனிமைப்படுத்துவதற்காக அவன்கார்ட் நிறுவனம் அறவிடும் தொகை யாதென்பதையும்;

(vi) அவன்கார்ட் நிறுவனத்தினால் இதுவரை தனிமைப்படுத்தலுக்காக ஆற்றுப்படுதப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

878/2020

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் அரசாங்கத்தின் சிவில் மற்றும் இராணுவ கிளைகள் பிரிக்கப்பட்டதிலிருந்து இலங்கை அரசாங்கத்தின் சிவில் கிளையின் உறுப்பினர்களை இராணுவக் கிளையில் அல்லது மறுதலையாக முறையான நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றதா என்பதையும்;

(ii) 2019 நவம்பர் 17 ஆம் திகதிக்குப் பின்னர் எவரேனும் சேவையிலுள்ள ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் சிவில் பதவிகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அவர்கள் ஒவ்வொருவரின் பெயரையும்;

(iv) சிவில் பதவிகளுக்காக அவர்களை நியமித்தமைக்கான நியாயமான காரணத்தை வெவ்வேறாகவும்;

(v) சேவையிலுள்ள ஆயுதப்படை உறுப்பினர்களை சிவில் பதவிகளில் நியமிக்கும் இந்த கொள்கை மாற்றம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டதா என்பதையும்;

(vi) இலங்கை நிர்வாக சேவை (SLAS), இலங்கை திட்டமிடல் சேவை (SLPS), மருத்துவ சேவை, இலங்கைச் சுங்கம், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை (SLICTS) போன்றவற்றில் சிவில் பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆற்றலுள்ள உத்தியோகத்தர்கள் எவரும் இல்லையா என்பதையும்;

(vii) அவ்வாறெனில், மேற்கூறப்பட்ட சேவைகள் தொடர்ச்சியாக இருப்பதால் ஏதேனும் பயனுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

940/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்வாங்கும் வகையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்கும் வேலைத்திட்டமொன்றை அமைச்சினால் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) வாடகை வீடுகளில் வசிக்கின்ற குடும்பங்களுக்கும் மேற்படி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

944/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் கண்டி, பல்லேகல சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி போட்டிகளின் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஒவ்வொரு போட்டிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையில் மேற்படி விளையாட்டு மைதானத்தை பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி விளையாட்டு மைதானத்தின் பராமரிப்புப் பணிகள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2021 பெப்ரவரி 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

43/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையின் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் தற்போதுள்ள அலுவலகர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இணைத்துக் கொள்ளல் ஒழுங்குகளின் படி உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் உள்ள அலுவலர் ஒருவர், பொலிஸ் பரிசோதகர் பதவி வரையில் பதவியுயர்வு பெறுவதற்கு நிறைவு செய்ய வேண்டிய சேவைக் காலம் எவ்வளவு என்பதையும்;

(iii) அதன்படி, உரிய சேவைக் காலத்தினை நிறைவு செய்த உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

143/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை கடன் பெற்றுக்கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பெயர்கள் யாவை;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கை மின்சார சபையானது மேற்படி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள கடன் தொகை வெவ்வேறாக யாது;

(iii) இலங்கை மின்சார சபையினை நிதிரீதியில் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

322/2020

கௌரவ புத்திக பத்திறண,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கிரிக்கற் விளையாட்டை மேம்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொகையில் அரசாங்க பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள பிள்ளைகளின் கிரிக்கற் விளையாடும் திறமைகளை வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிரிக்கற் விளையாட்டின் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பாடசாலை விளையாட்டு வீரர்களை வழிப்படுத்துவதற்கான திட்டங்களைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை கிரிக்கட் நிறுவனம் மற்றும் அத்துடன் இணைந்த ஏனைய சங்கங்களின் நிருவாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அரசாங்கம் சம்பந்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகளில் சம்பந்தப்படுகின்ற முறை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

488/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள விளையாட்டுப் பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டுப் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டுப் பாடசாலைகளிலும் இன்றளவில் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் மற்றும் இதர வசதிகள் யாவையென்பதையும்;

(v) விளையாட்டுப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

533/2020

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான மருந்தகங்களின் (ஒசுசல) எண்ணிக்கை எத்தனை;

(ii) குறிப்பிட்ட மருந்தகங்கள் அமைந்துள்ள இடங்களின் முகவரிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) அரச மருந்தகக் கிளை வலையமைப்பினை அநுராதபுர மாவட்டத்தில் மேலும் விஸ்தரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

584/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக தோட்ட மருத்துவ நிலையங்கள் (Estate Dispensary) நடைமுறையில் உள்ளன என்பதையும்;

(ii) அத்தகைய ஒரு நிலையத்தின் பொறுப்பாளராக, தோட்ட மருத்துவ உதவியாளர் பதவியை வகிக்குமொருவர் (Estate Medical Assistant) கடமையாற்றுகின்றார் என்பதையும்;

(iii) நோயாளர்களை பரிசீலித்து ஔடதங்களை நியமித்தல், குறிப்பிட்ட தோட்ட மருத்துவ உதவியாளரால் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக தற்போது இயங்கிவரும் தோட்ட மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வைத்தியசாலைகளில் பணியாற்றும் தோட்ட மருத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி தோட்ட மருத்துவ உதவியாளர்களின் தகைமைகள் யாவை;

(iv) அவர்களது விடயப்பொறுப்புக்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தோட்ட மருத்துவ உதவியாளர்களினால் மேற்கொள்ளப்படும் விடயப்பொறுப்பு சட்டரீதியானதா;

(ii) இன்றேல், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

669/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முன்மொழியப்பட்டுள்ள கும்புக்கன் ஓயா நீர்ப்பாசன கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

(ii) அதன் மதிப்பீட்டுச் செலவீனம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நீர்ப்பாசன கருத்திட்டத்திற்காக செலவாகும் தொகையினை பெற்றுக்கொள்ளும் முறை யாதென்பதையும்;

(iv) மேற்படி நீர்ப்பாசன கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

786/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாணவர் ஆலோசனை ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பரீட்சையில் சித்தியெய்தவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அப்பரீட்சையில் சித்தியெய்தவர்களுக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லையென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு துரிதமாக நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

860/2020

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுவரித் திணைக்களத்தின் முக்கிய விடயப்பொறுப்பு யாது;

(ii) இலங்கையினுள் அமைந்துள்ள மொத்த மதுவரி நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி எண்ணிக்கை மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மதுவரித் திணைக்களத்தில் உள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி எண்ணிக்கையானது மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) மதுவரித் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளதா;

(iv) மதுவரித் திணைக்களத்துக்கு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

867/2020

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1970 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை செயற்பட்டு வந்த திருகோணமலை மாவட்டத்தில் அமையப்பெற்றிருந்த கிண்ணியா சுற்றுலா நீதிமன்றம், வடகிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்தச் சூழநிலை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டது என்பதையும்;

(ii) நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும் வரை நீதிமன்ற செயற்பாடுகளை அரசாங்கக் கட்டிடமொன்றில் தற்காலிகமாக மீள ஆரம்பிப்பதற்கு கடந்த வருடம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை மேற்படி நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திருகோணமலை நிதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கும் கிண்ணியா பிரதேச மக்கள் வழக்கு நடவடிக்கைகளுக்கென திருகோணமலை வரை செல்லும்போது ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைப்பதற்கும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தினை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

873/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை நிர்மாணிப்பதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை என்பதையும்;

(ii) அதை நிர்மாணிப்பதற்கு செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி செலவினத்தை துறைமுக அதிகாரசபையினால் ஏற்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி முனையத்தை நிர்மாணிப்பதற்கு தேவைப்படும் காலம் எவ்வளவென்னபதையும்;

(v) இதனை நிர்மாணிப்பதன் ஊடாக இலங்கைக்கு கிடைக்கும் வருடாந்த வருமானம் அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

941/ 2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள க.பொ.த. உயர் தரத்திற்கு தொழில்நுட்பவியல்துறை பாடங்களில் வகுப்புகள் நடாத்தப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் தொழில்நுட்பவியல் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இன்றளவில் காணப்படுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையும் இன்றளவில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பாடசாலைக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) க.பொ.த. உயர் தரத்திற்கு தொழில்நுட்பவியல்துறை பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவதற்கு தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

946/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வேலணைத்துறையிலிருந்து புங்குடுதீவு, மடத்துவெளி வரையிலான பாலம் இலங்கையில் அமைந்தள்ள நீளமான பாலங்களில் ஒன்றென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நீளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலம் இறுதியாக புனரமைக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iv) அதற்கான நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தினூடாகப் பயணிப்பது அபாயகரமானது என்பதையும்;

(ii) பொது மக்களும் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களும் பயணிக்கின்ற இந்தப் பாலத்தின் மீது பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாலம் பூரணமாக புனரமைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1018/2020

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை அப்போது காணப்பட்ட மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை வகித்த அமைச்சர்/ அமைச்சர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், மேற்படி அமைச்சின் கீழ் காணப்பட்டதா என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மேற்படி நிறுவனத்துக்குப் பொறுப்பாகவிருந்த தவிசாளர் / தவிசாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்திற்கு பொறித்தொகுதிளை கொள்வனவு செய்கையில் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது 670 மில்லியன் ரூபா பெறுமதியான பொறித்தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி கொள்வனவின் போது ஏதேனும் முறைகேடு இடம்பெற்றிருப்பின், அந்த முறைகேடு யாதென்பதையும்;

(iv) அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அது தொடர்பாக முறையான விசாரணை நடாத்தப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1019/2020

கௌரவ யூ. கே. சுமித் உடுகும்புர,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் இலங்கைக்கு பெரும் சொத்தாக உள்ளதென்பதையும்;

(ii) கடந்த ஆட்சிக் காலத்தில் அதில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தும் சாத்தியம் உள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) இதற்காக ஆலோசனை வழங்கிய ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நெல் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் அவ்வளாகத்தை மீள புனரமைப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிடமிருந்து அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) சர்வதேச விமான நிலையமொன்றில் நெல் களஞ்சியப்படுத்தியதன் மூலம் இலங்கை சர்வதேச ரீதியாக அபகீர்த்திக்கு உள்ளானதா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?